செ.வெ.எண்.**33** **நாள்.22.01.2018**

# பத்திரிக்கை செய்தி

மாவட்ட சமூகநல அலுவலகம், காஞ்சிபுரம் சமூகநல இயக்குநர், சமூகநல இயக்குநரகம், சென்னை-15 அவர்களின் ந.க.எண்.035775/மந-2(2)/2017 நாள்-04.12.2017.ன்படி 08.03.2018 அன்று 2017-2018ஆம் ஆண்டுக்கான உலக மகளிர் தின விழா கொண்டாடும்போது பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறந்த முறையில் சேவைப்புரிந்த ஒருவருக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அவ்வையார் விருது வழங்கப்பட உள்ளது.

அவ்விருதிற்கு ரொக்கப்பரிசு, தங்க பதக்கம், தகுதியுரை மற்றும் சால்வை வழங்கப்படவுள்ளதால், உரிய தகுதி வாய்ந்த நபர்களிடம் இருந்து கீழ்காணும் வகையில் தகுதியுடைய கருத்துருக்கள் பெற பத்திரிக்கையில் விளம்பரம் செய்ய தகுதியான விண்ணப்பங்கள் கீழ்காணும் முகவரியில் நான்கு தினங்களுக்குள் அளிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளார்.

**அனுப்புவதற்கான விதிமுறைகள்-**

1. தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவர், 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சமூகநலனைச் சார்ந்த நடவடிக்கைகள் பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிப்புரிந்து மக்களுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றுபவராக இருத்தல் வேண்டும்.
3. இணைப்பு படிவம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். (தமிழ் (வானவில் அவ்வையார்) மற்றும் ஆங்கிலம்)
4. விண்ணப்பதாரர் பெண்களின் முன்னேற்றத்திற்காக சிறப்பாக சேவைப்புரிந்த விவரம் 1 பக்க அளவில் தமிழ் (வானவில் அவ்வையார்) மற்றும் ஆங்கிலம்) (Soft Copy and Hard copy) அனுப்ப வேண்டும்.
5. விண்ணப்பதாரரின் கருத்துரு (Booklet-2) (தமிழ்1 மற்றும் ஆங்கிலம்1) மற்றும் Passport Size Photo.

மாவட்ட சமூகநல அலுவலகம்,
எண–43, காந்தி நகர் 2வது தெரு,
IOB வங்கி அருகில்,
கலெக்டர் ஆப்ஸ் அருகாமையில்,
செவிலிமேடு, காஞ்சிபுரம்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.